7

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8075255

C

1. District : Vellore
மாவட்டம்
PS: V & AC
காவல்நிலையம்
Year: 2020
ஆண்டு
FIR No.: 18/2020
மு.த.அ. எண்
Date: 12/12/2020
நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018
Sections பிரிவுகள்: 7 & 12 r/w 7
(ii) Act சட்டம்:
Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்:
Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day :
குற்ற நிகழ்வு நாள்
Date from : 11.12.2020
நாள் முதல்
Date to : 12.12.2020
நாள் வரை
Time Period :
நேர அளவு
Time from : 08.00 hrs
நேரம் முதல்
Time to : 04.00 hrs
நேரம் வரை
(b) Information Received at PS. Date : 12.12.2020
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்
Time : 03.00 hrs & 17.00 hrs
நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Vol - II
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time : 03.00 hrs & 17.00 hrs
நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக
written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்
17 Km North East
Beat Number : -
முறைக் காவல் எண்
(b) Address : R.T.O Check post, Serkadu, Katpadi Taluk, Vellore District.
முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : -
மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : M.S. Deeradayalan
குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : Sadagopa Ramanujam
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 14/01/1970
நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : Indian
நாட்டினம்
(e) Passport No. :
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue :
வழங்கப்பட்ட நாள்
Place of Issue :
வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Inspection Cell Inspector
தொழில்
(g) Address : Inspection Cell office, Collectorate, Sathuvachari, Vellore-9.
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. Tmt. G. Jayamekala Age 52/2020 W/o Gunamani, MV Inspector (Non Tech) RTO Check post, Serkadu, Katpadi Taluk, Vellore
2. Th. A. Dinakaran @ Shyam Age 40/2020 S/o Anandhan, Bollamadugu Village, Bommasamudhiram post, Chittoor Taluk, AP.
3) Th. J. Lalandoss Age 50/2020 S/o Jathi, No.115 A, Madha Koil Street, Serkadu, Vellore Dt. (working as Gang Mazdoor, Highways, Katpadi Sub Division, Vellore Division)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ......—...... Rank ......—...... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ......—......on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............ பதவி ............ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. [signature] 12/12/2020
Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] S. Vijayalakshmi 12/12/20.
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
12.12.2020 @ 19.00 hrs

Name: பெயர் S. VIJAYALAKSHMI
Rank: நிலை INSPECTOR OF POLICE No. எண் ......
V & AC, VELLORE.

**SUBMITTED:**

இன்று 12.12.2020-ஆம் தேதி 17.00 மணியளவில் நான் நிலைய ஆஜரில் இருந்தபோது, வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள் மேலொப்பம் செய்து கொடுத்த திரு.M.S.தீனதயாளன், ஆய்வுக்குழு ஆய்வாளர், வேலூர், திருவண்ணாமலை, திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்கள், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சத்துவாச்சாரி, வேலூர்-9 என்பவரின் புகாரை பெற்று பார்க்க, அதன் விவரம் பின்வருமாறு: வேலூர் 12.12.2020 அனுப்புநர், M.S.தீனதயாளன், ஆய்வுக்குழு ஆய்வாளர், வேலூர், திருவண்ணாமலை, திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்கள், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சத்துவாச்சாரி, வேலூர்-9 பெறுநர், துணைக்காவல் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, வேலூர் அம்மையீர், நான் வேலூர், திருவண்ணாமலை, திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டங்களுக்கு ஆய்வுக்குழு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வேலூர் மாவட்டம் சேர்க்காடு போக்குவரத்து சோதனை சாவடியில் பணியாற்றும் அலுவலர்கள் வெளிமாநிலத்தில் இருந்து தமிழ்நாட்டிற்குள் நுழையும் வாகன ஓட்டுனர்களிடமிருந்தும் மற்றும் உள்மாநில வாகன ஓட்டுனர்களிடமிருந்தும் தற்காலிக அனுமதி சீட்டு வழங்குவதற்காகவும், விதிமீறல்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் வாகனத்தை அனுப்புவதற்காகவும், மேலும் நடைசீட்டுகளில் முத்திரை பதிப்பதற்காகவும் கையூட்டு பெறுவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலினை நான் எனது நம்பகமான தகவலாளர்கள் மூலம் ஊர்ஜிதம் செய்து கொண்டு, வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளருக்கு 12.12.2020 ஆம் தேதி அதிகாலை சுமார் 03.00 மணிக்கு தகவல் தெரியப்படுத்திய பின் அதிகாலை சுமார் 04.00 மணியளவில் நான் மற்றும் வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் மற்றும் குழுவினருடன், மேற்படி சேர்க்காடு போக்குவரத்து சோதனை சாவடி அலுவலகத்திற்கு வந்து சேரப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் இருந்த நபர்களை விசாரித்தில் திருமதி.G.ஜெயமேகலா மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில்நுட்பம் அல்லாத), போக்குவரத்து சோதனை சாவடி, சேர்க்காடு, வேலூர் மாவட்டம், திரு.B.கதிர்வேல் உதவியாளர், எனவும் தங்களை அறிமுகப்படுத்தி கொண்டனர். மேலும் அலுவலகத்தின் வெளியே நெடுஞ்சாலையில் வரும் வாகனங்களை நிறுத்தி கொண்டு இருந்த இரண்டு நபர்களை விசாரிக்க அவர்கள் 1) திரு.தினகரன் (எ) ஷியாம் த/பெ ஆனந்தன், கொல்லமடுகு கிராமம், பொம்மசமுத்திரம் அஞ்சல், சித்தூர் தாலுக்கா, ஆந்திர மாநிலம் என்றும் 2) திரு.லோலன்தாஸ் த/பெ ஜோதி, எண்:115/ஏ, மாதா கோயில் தெரு, சேர்க்காடு கிராமம் மற்றும் அஞ்சல், காட்பாடி தாலுக்கா (சாலை பணியாளர்) என்றும்

கூறியவர்களை வழக்கு நிமித்தம் சோதனை செய்வதற்காக சோதனை சாவடி அலுவலகத்திற்கு அழைத்து வரப்பட்டது. மேற்படி நபர்களிடம் எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு, எங்களிடம் எந்த பணமோ, பொருளோ இல்லை என்று சுயபரிசோதனை செய்து காண்பிக்கப்பட்டது. திருமதி.G.ஜெயமேகலா, மோட்டார் வாகன ஆய்வாளர், (தொழில்நுட்பம் அல்லாத) போக்குவரத்து சோதனை சாவடி, சேர்க்காடு, வேலூர் மாவட்டம் அவர்களை என்னுடைய முன்னிலையில் காவல் ஆய்வாளர் திருமதி.S.விஜயலட்சுமி அவர்கள் மூலமாக சோதனை செய்ய அவர் வைத்திருந்த சிறிய மணிபர்சில் ரூ.4,725/- பணம் இருந்தது. மேலும் அவர் உட்கார்ந்திருந்த மேசையின் இடது புற இழுவறையில் பணம் அடுக்கப்படாமல் சிதறி கிடந்தது. அதை எடுத்து எண்ணிப்பார்க்க அதில் பணம் ரூ.22,850/- இருந்தது. மேலும் அவர் அமர்ந்திருந்த மேசையின் பக்கத்தில் இருந்த மேசையின் இடதுபுற இழுவறையில் பணம் ரூ.46,800/- அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. மேற்படி பணத்திற்கான முகாந்திரம் கேட்க ரூ.46,800/- ஆனது 11.12.2020 அன்று காலை 08.00 முதல் 12.12.2020 அன்று காலை 04.00 மணி வரை சோதனை சாவடியில் உள்ளூர் மற்றும் வெளியூர் வாகனங்களுக்கு வசூல் செய்த வரி, பசுமை வரி, கட்டணம், சேவை கட்டணம், இணக்க கட்டணம் மற்றும் அமைப்பு சாரா ஒரு சதவீத கட்டணம் என்றும் கூறினார். மேற்படி பணம் ரூ.46,800/- கணினியில் வசூலிக்கப்பட்டுள்ளதா என்று Log in செய்து பார்க்கப்பட்டும் மற்றும் பணப்பதிவேட்டினை பார்வையிட்டும் சரிபார்க்கப்பட்டு மேற்படி பணம் ரூ.46,800/- திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும் ரூ.22,850/- மற்றும் அவரின் சிறிய மணிபர்சில் இருந்த ரூ.4,725/- பணத்தை பற்றி முகாந்திரம் கேட்க அவரால் மேற்படி பணத்திற்கு தக்க முகாந்திரம் கூற முடியவில்லை. எனவே மேற்படி பணம் ரூ.22,850/- மற்றும் ரூ.4,725/- மொத்தம் ரூ.27,575/- வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. அங்கு பணியில் இருந்த உதவியாளர் திரு.B. கதிர்வேல் அவர்களை சோதனை செய்ய அவரிடம் பணம் ரூ.370/- இருந்தது. மேற்படி பணத்திற்கான முகாந்திரம் கேட்க அவர் தனது இரு சக்கர வாகனத்திற்கு பெட்ரோல் நிரப்புவதற்காக எடுத்து வந்ததாகவும், அது தனது சொந்த பணம் என்று தெரிவித்ததால் மேற்படி பணத்தை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அலுவலகத்திற்கு வெளியில் சென்னை – பெங்களூர் நெடுஞ்சாலையில் வாகனத்தை தடுத்து நிறுத்தி கொண்டு இருந்த திரு.தினகரன் (எ) ஷியாம் த/பெ ஆனந்தன், கொல்லமடுகு கிராமம், பொம்மசமுத்திரம் அஞ்சல், சித்தூர் தாலுக்கா, ஆந்திர மாநிலம் என்பவரை சோதனை செய்ய அவருடைய மணிபர்சில் ரூ.8,600/- மற்றும் பேண்ட்டின் இடதுபுற பாக்கெட்டில் ரூ.1,400/- இருந்தது. மேற்படி பணத்திற்கான முகாந்திரம் கேட்க அவரால் பணத்திற்கான தக்க முகாந்திரம் கூற முடியவில்லை. எனவே மேற்படி பணம் ரூ.8,600/- மற்றும் ரூ.1,400/- மொத்தம் ரூ.10,000/- ஐ வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேலும் விசாரணையில் திரு.தினகரன் என்பவர்

கடந்த 4 ஆண்டுகளாக அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு டீ,காபி மற்றும் உணவு வாங்கி தருவதாகவும் அதற்கு தினக்கூலியாக ரூ.220/- போக்குவரத்து ஆய்வாளர் திருமதி. ஜெயமேகலா அவர்கள் தருவதாகவும் தெரிவித்தார். பின்னர் அவருடன் இருந்த மற்றொரு நபர் திரு.லோலன்தாஸ் த/பெ ஜோதி, எண்:115/ஏ, மாதா கோயில் தெரு என்பவரை சோதனை செய்ய அவருடைய பேண்ட்டின் இடதுபுற பாக்கெட்டில் ரூ.1,300/- இருந்தது. மேற்படி பணத்திற்கான முகாந்திரம் கேட்க அவரால் பணத்திற்கான தக்க முகாந்திரம் கூற முடியவில்லை. எனவே மேற்படி பணம் ரூ.1,300/-ஐ வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேலும் அவரை விசாரிக்க அவர் தான் நெடுஞ்சாலை துறையில் சாலை பணியாளராக பணிபுரிந்து வருவதாகவும், எப்போதாவது சோதனை சாவடிக்கு வந்து சோதனை சாவடியில் பணிபுரியும் அலுவலர்களுக்கு உதவி செய்வதாகவும் கூறினார். பிறகு மோட்டார் வாகன ஆய்வாளர் (தொழில்நுட்பம் அல்லாத) திருமதி.ஜெயமேகலா என்பவரிடம் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகளை பற்றி கேட்க அவர் 1) அலுவலகத்தின் வருகை பதிவேடு 2) பணியில் உள்ளவர்கள் விவர பதிவேடு 3) போக்குவரத்து சோதனை சாவடி தாமத வருகை பதிவேடு 4) சோதனை சாவடி அலுவலக பணியாளர்கள் பணம் கையிருப்பு பதிவேடு 5) சோதனை சாவடி பணப்பதிவேடு 6) வாகன சோதனை அறிக்கை (Vehicle Inspection Record) 7) Serkadu Check Post – MVI's Individuals performance Collection and Check reports from 2019 ஆகிய பதிவேடுகளை ஆஜர் செய்தார். அப்பதிவேடுகளை வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பிறகு 11.12.2020 அன்று காலை 08.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை மற்றும் 11.12.2020 அன்று இரவு 8.00 மணி முதல் 12.12.2020 அன்று காலை 04.00 மணி வரை சோதனை சாவடியில் வசூல் செய்யப்பட்ட பணத்திற்கு உண்டான Statement குறித்து கேட்க அவர் அதற்குண்டான விவரத்தை கணினியில் இருந்து பிரிண்ட் எடுத்து கொடுத்தார். அவ்வாறு கொடுத்த Collection Statement நான்கு தாள்களிலும் நான், மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.ஜெயமேகலா, உதவியாளர் திரு.கதிர்வேல் மற்றும் வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு ஆய்வாளர் திருமதி.விஜயலட்சுமி ஆகியோரிகள் கையொப்பமிட்டு வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேற்படி சேர்க்காடு போக்குவரத்து சோதனை சாவடி அலுவலக அறைக்குள் அட்டை பெட்டிகளில் ஸ்ரீ வாசவி பார்ம்ஸ் கம்பெனி அத்தி பழம் ஒரு கிலோ அளவு மொத்தம் 3 கிலோ, ஆரஞ்சு பழங்கள் சுமார் 2 கிலோ மற்றும் பூ பைகள் இரண்டு சுமார் 1/2 கிலோ ஆகிய பொருட்கள் காணப்பட்டன். அது குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.ஜெயமேகலா அவர்களிடம் விசாரிக்க அவர் சோதனை சாவடி வழியாக செல்லும் வாகன ஓட்டுனர்கள் அவர்களாக அன்பளிப்பாக கொடுத்த பொருட்கள் என்று தெரிவித்தார். மேலும் அப்பொருட்கள் அழுகும் தன்மை உடையதால் மேற்படி பொருட்களை மோட்டார் வாகன ஆய்வாளர்

திருமதி.ஜெயமேகலா அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேற்படி இருதுறை திடீர் கூட்டு சோதனையானது 12.12.2020 அன்று காலை 07.30 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்கண்ட இருதுறை திடீர் கூட்டு சோதனை சம்மந்தமான விரிவான செயல்முறைகள் 12.12.2020 அன்று காலை 04.00 மணி முதல் 07.30 வரை தயார் செய்யப்பட்டது. இன்று நான் 12.12.2020 ந் தேதி பகல் 17.00 மணியளவில் வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் சேர்ந்து 12.12.2020 அன்று சேர்க்காடு போக்குவரத்து சோதனை சாவடியில் இருதுறை திடீர் கூட்டுதணிக்கையின் போது பொது ஊழியரான மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.ஜெயமேகலா தனது அலுவல் பணியை முறையற்ற வகையிலும் நேர்மையற்ற முறையிலும் செய்து கொடுத்தமைக்காக வாகன ஓட்டுனர்களிடமிருந்து கையூட்டாக பணம் பெற்று கொண்ட குற்றத்திற்காகவும், பொது ஊழியரான மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.G.ஜெயமேகலா அவர்கள் வாகன ஓட்டுனர்களிடமிருந்து கையூட்டாக பணம் பெறுவதற்கு தூண்டியதற்காக தனிநபர்களான திரு.தினகரன் (எ) ஷியாம் த/பெ ஆனந்தன், கொல்லமடுகு கிராமம், பொம்மசமுத்திரம் அஞ்சல், சித்தூர தாலுக்கா, ஆந்திரா மாநிலம் மற்றும் திரு.லோலன்தாஸ் த/பெ ஜோதி, எண்:115/ஏ, மாதா கோயில் தெரு, சேர்க்காடு கிராமம் மற்றும் அஞ்சல், காட்பாடி தாலுக்கா (தற்போது சாலை பணியாளர், நெடுஞ்சாலை துறை (க & ப) காட்பாடி உட்கோட்டம், வேலூர் கோட்டம்) ஆகிய மூவர் மீதும் தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் திடீர் கூட்டு சோதனையில் கைப்பற்றப்பட்ட தக்க முகாந்திரம் கூற இயலாத பணம் ரூ.38,875/-, ஆவணங்கள் மற்றும் இருதுறை திடீர் கூட்டு சோதனை செயல்முறைகள் ஆகியவற்றை இத்துடன் இணைத்து நடவடிக்கைக்காக ஒப்படைக்கிறேன். Sd.xxxxxxxx(M.S.தீனதயாளன்) ஆய்வுக்குழு ஆய்வாளர், வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், சத்துவாச்சாரி, வேலூர்-9 இணைப்பு : மேற்கூறியவாறு

Received the complaint on 12.12.2020 at 17.00 hrs, Inspector Tmt.S.Vijayalakshmi to receive the complaint and register a case Sd/- xxxxxxxxxxx 12/12/2020 (HEMACHITHRA.K.S) DSP, VAC, Vellore.

Madam, Received the complaint and registered a case in Vellore Vigilance and Anti-Corruption Cr.No.18/2020, U/s 7 and 12 r/w 7 of Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 on 12.12.2020 at 17.30 hrs. The FIR in original along with the complaint, Joint Surprise check proceedings in original sent to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Vellore and sent the other copies to the officers concerned. Sd/- xxxxxxxxxxx (S.VIJAYALAKSHMI) 12/12/2020, Inspector of Police, V&AC, Vellore.

S. Vijayalakshmi
12/12/20
(S.VIJAYALAKSHMI)
Inspector of Police
V&AC, Vellore.